RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s1954

OPEN ACCESS

# உடுமலை நாராயணகவி பாடல்களில் சாதி ஒழிப்பும் மது ஒழிப்பும்

மா. சண்முகவள்ளி [அ, *]

[அ] தமிழ்த்துறை, மாநிலக் கல்லூரி, சென்னை-600005, தமிழ்நாடு, இந்தியா

# Abolition of Caste and Abolition of Alcohol in Udumalai Narayanakavi Songs

M. Shanmugavalli [a, *]

[a] Department of Tamil, Presidency College, Chennai-600005, Tamil Nadu, India

* Corresponding Author: msvalli80@gmail.com

Received: 01-09-2022
Revised: 24-10-2022
Accepted: 03-11-2022
Published: 10-12-2022

**ABSTRACT**

Udumalai Narayanakavi is a great lyricist. Rationalist thinker. In his songs, he clearly mentioned humanity and the values of life. It is noteworthy that the ideas of social reform prevailed in his thought-provoking songs. The way he recorded his strong views on society in his songs sets him apart from other poets. From time to time, luminaries and wise men have worked hard to eradicate caste and alcoholism. Nevertheless, Periyar's policies inspired them to abolish them and reform the people. Udumalai Narayanakavi, who followed Periyar's ideals, used his rational thoughts in his movie screen songs. Through this, he was actively engaged in removing the social weeds of caste and alcohol which had been prevalent among the people. Udumalai Narayana Kavi, a multi-faceted and socially conscious person, has been praised and appreciated for his use of his songs as a tool to make people aware of the evils of caste, alcohol, etc., and the need to eradicate them. This article narrates Udumalaiyar's impressions about caste and alcohol in the songs of the film that reach out to the people easily.

**Keywords:** Udumalai Narayanakavi, Rational Thinker, Humanity, Values of Life

## முன்னுரை

மனித நேயங்களும் மாண்புகளும் வாழ்வியல் அறங்களும் மதிப்பிழந்து கொண்டிருக்கும் இன்றைய வாழ்க்கைச் சூழல் சமூகத்தைப் பெரிதும் பாதிக்கிறது. தனிமனிதர்களின் தொகுதியே சமுதாயம் ஆகும். தனிமனித மேம்பாடே ஒரு சமுதாயத்தின் மேம்பாடாக அமைகிறது. தனிமனிதன் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுகலாறுகளையும் அவன் சமுதாயத்தில் ஒழுக வேண்டிய முறைகளையும் அறங்கள் எனக் குறிக்கலாம். அத்தகைய அறங்களை இலக்கிய இலக்கணங்கள் சுட்டிக்காட்டுகின்றன. மனம், மொழி, மெய் ஆகியவற்றால் நல்லவை செய்தலும் அல்லவை கடிதலும் அறத்தின் பாற்படும் என்பர். அத்தகைய அறங்களை அக்காலத் திரையிசைப் பாடல்களும் வலியுறுத்துகின்றன. தமிழ்ப் பாட்டிலக்கிய உலகில் தனக்கென ஒரு தனிப்பாதையை வகுத்துக்கொண்டு 1933 - 1972 வரையிலான காலக்கட்டங்களில் திரையுலகில் கோலோச்சி கலையுலகத்தால் முதன்முதலில் “வாத்தியார்” என்று அழைக்கப்பட்டவர் பகுத்தறிவுக் கவிராயர், பகுத்தறிவுக் குயில் எனப் போற்றப்பட்ட உடுமலை நாராயணகவி. திரையுலகில் நாற்பதாண்டு காலங்களாய்ப் பாடிப்பறந்த பகுத்தறிவுக் குயிலாம் உடுமலை நாராயணகவி தம் பாடல்களில் பல சீர்திருத்தக் கருத்துகளைக் கூறி சீர்திருத்தக் கவிஞராகத் திகழ்ந்தார். அவர் தம் பாடல்களில் காணலாகும் அறக்கருத்துகளை எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகிறது.

## ஆய்வு முறை

1933 முதல் 1972 வரையிலான கால கட்டங்களில் பாட்டிலக்கிய உலகில் பகுத்தறிவுச் சிந்தனையோடு சமூகச் சீர்திருத்தக் கருத்துகள் மூலம் மனித மனத்தை மேம்படுத்தும் அறங்களில் தம் பாடல்களை வழங்கியவர் உடுமலை நாராயணகவி. உடுமலையாரின் அத்தகைய பாடல்களை ஆய்வு செய்யும் நோக்கில் இக்கட்டுரையின் பொருண்மை தேர்ந்தெடுக்கப்பட்டது. மக்களின் மனத்தை எளிதில் ஈர்க்கக் கூடிய ஊடகம் திரைத்துறை. அத்துறை வாயிலாகப் பகிரப்படும் எக்கருத்தும் எளிதில் மக்களைச் சென்றடையும். கண்ணதாசனையும், பட்டுக்கோட்டையாரையும் அதிகம் சிந்தித்த தமிழ் ஆய்வுலகம் பகுத்தறிவுக் கவிராயராகத் திகழ்ந்த உடுமலை நாராயணகவியை அதிகம் போற்றவில்லை. நாற்பதாண்டு காலங்கள் திரைத் துறையில் கோலோச்சிய சிந்தனையாளரை சிந்தித்தல் அவசியம். இத்தகைய காரணங்களால் இத்தலைப்பு தேர்ந்தெடுக்கப்பட்டது. ஆய்வின் முதற் கட்டமாக உடுமலை நாராயணகவியின் பாடல்கள் எனும் நூல்களும் அவர் தம் பாடல்கள் குறித்த ஆய்வு நூல்களும் வாசிக்கப்பட்டன. அவரது பல்வேறு சீர்திருத்தக் கருத்துகளுள் ஆய்வு எல்லை கருதி மனித இனத்தை அழிக்கும் ஆற்றல் படைத்த சாதி குறித்ததும் மது குறித்ததுமான உடுமலையாரின் பதிவுகள் இக்கட்டுரையில் நோக்கப்படுகின்றன.

## அறம்

மனிதன் தனக்கென வரையறுத்துக் கொண்ட வாழ்வியல் ஒழுக்க நெறிமுறைகளை அறம் எனலாம். தமிழர் வாழ்வியலின் கோட்பாடுகளுள் அறமே முதன்மையாய் அமைகிறது. அறம் எனும் சொல்லுக்கு, சென்னை பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரகராதி தருமம், புண்ணியம், தகுதியானது, சமயம், ஞானம், அறச்சாலை, நோன்பு தீப்பயன் உண்டாக்கும் சொல், தரும தேவதை, யமன் எனும் பத்து விதமான விளக்கங்களைத் தருகிறது.

## உடுமலையார் பாடல்களில் அறம்

பழந்தமிழர் வாழ்வியல் கோட்பாடுகளுள் முதன்மையாய் நிற்கும் அறங்களை இலக்கிய இலக்கணங்கள் முன்னிறுத்துகின்ற அறங்களை அக்காலத் தமிழ்த் திரையுலகமும் வலியுறுத்தியது. சிறந்த கதை வாயிலாகவும், பாடல்கள் வாயிலாகவும் உயரிய பல அறக்கருத்துகளை மக்களிடையே விதைத்து அறியாமை களையகற்றும் சமூகப் பணியினை மேற்கொண்டது. அக்கால கட்டங்களில் குடும்பக் கதைகள், புராணங்கள், பக்திக் கதைகள், வரலாற்றுக் கதைகள் போன்றவற்றை மையமாகக் கொண்டு தமிழ்த் திரையுலகம் இயங்கியது. அக்கலையுலகத்தில் தேசப்பற்று, மொழிப்பற்று, முற்போக்குச் சிந்தனைகள், சமூகத்தின் அன்றாடச் சிக்கல்கள், பகுத்தறிவுக் கருத்துகள் போன்றவற்றை மையக் கருத்துகளாகக் கொண்ட பாடல்களை இயற்றி மக்களின் உள்ளங்களில் நீங்கா இடம் பிடித்தார் உடுமலை நாராயணகவி. சமூகச் சீர்திருத்தக் கருத்துகளும், நகைச்சுவையும், நையாண்டியும் இவர் தம் பாடல்களில் நிறைந்து கிடக்கின்றன.

பாட்டினைப் போல் ஆச்சரியம் பாரின்மிசை இல்லையடா என்பான் பாரதி. இசைக்கு மயங்காத உயிர்கள் இல்லை. அத்தகைய இசையைக் கொண்டு மனிதனை நல்வழிப்படுத்தும் நோக்கில் பல அறக்கருத்துகளைத் தம் பாடலில் கையாண்டுள்ளார் உடுமலையார்.

உடுமலையார் தம் பாடல்களில் நல்லவை செய்தலுக்கும் அல்லவை கடிதலுக்குமாகிய இரு நிலைகளிலும் அறத்தை உணர்த்தியுள்ளார். அல்லவை கடிதல் என்பதன் கீழ் மூடப்பழக்க வழக்கங்கள், பொருளாதார ஏற்றத் தாழ்வுகள், அரசியல் புரட்டுகள், பெண்ணடிமைத்தனம், சாதி ஒழிப்பு, மது ஒழிப்பு போன்ற பல்வேறு அறங்களை உணர்த்தியுள்ளார். உலகில் களையப்பட வேண்டியவைகளில் சாதியும் மதுவும் முதன்மையானவை. இவ்விரண்டும் மனித இனத்தையே அழிக்கும் ஆற்றல் படைத்தவை. அதனால் உடுமலையார் இவ்விரண்டின் ஒழிப்பு குறித்து பெரிதாய் சிந்தித்துள்ளார்.

## சாதி ஒழிப்பு

பழங்காலத்தில் பிறப்பினால் சாதி வேறுபாடுகள் இருந்திருக்கவில்லை. அவரவர் செய்யும் தொழிலின் அடிப்படையிலேயே சாதிகள் பிரிக்கப்பட்டிருந்தன. அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்ற நால்வகைப் பிரிவினரையும் அவரவர்க்குரிய தொழிலையும் தொல்காப்பியம் பொருளதிகாரம் மரபியல் உணர்த்துவதிலிருந்து பிறப்பினால் சாதி வேறுபாடுகள் அக்காலத்தில் இருந்திருக்கவில்லை என்பது புலனாகிறது. பிற்காலத்தில் தான் பிறப்பினால் சாதி வேறுபாடுகள் பார்க்கும் நிலை தோன்றியது எனலாம்.

சாதிகள் எவ்வாறு தோன்றியிருப்பினும் அதை ஒழிக்கும் முயற்சிகளும் பழங்காலம் முதலே இருந்தன என்று கூறலாம். பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என வள்ளுவரும், சாதி இரண்டொழிய வேறில்லை என ஔவையும், இன்னும் பல அறிஞர் பெருமக்களும் சாதியை ஒழிக்கும் முயற்சியை மேற்கொண்டனர். சாதி ஒழிப்பில் பெரியார் முக்கியப் பங்காற்றினார். பெரியாரின் பகுத்தறிவு இயக்கம் சாதி மத பேதங்களைச் சாடியது. "தந்தை பெரியார் அவர்களே தமிழ் நாட்டு வரலாற்றில் இயக்க ரீதியாகச் சாதி வேறுபாட்டை எதிர்த்தவர். இதற்கு முன்னெல்லாம் சாதியெதிர்ப்பு என்பது தனிப்பட்டவரின் குரலாகத்தான் இருந்தது. செயலில் நிறைவேற்றத் தக்க இயக்கத்தினை முதன் முதலாக அமைத்துப் பாடுபட்டவர் தந்தை பெரியாரே "என்பார் (Thatchinamoorthi, 2011).

பெரியாரின் பகுத்தறிவுக் கொள்கைகளில் தோய்ந்திருந்த உடுமலையாரும் சாதிக் கொடுமையைக் களைய முற்பட்டார். அதற்கு அவர் தம் பாடல்களை ஓர் ஆயுதமாகப் பயன்படுத்தியுள்ளார். பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் எனும் வள்ளுவன் கருத்துக்கு உடன்பட்ட உடுமலையார் அக்குறட்பாவை தொகையறாவாக அமைத்து,

"சமானம் மனிதர் பிறவியில் ஒருமை

என்பதே முறைமை (சமா)

இம்மானில வாழ்வினில் உணர்வினில்

ஏற்றிடும் சுகநல உரிமை (சமா)

அறிவே தரும் பெருமை சிறுமை

அவரவர் பால் அமைந்த திறமை

உறவுடன் யாவரும் வேற்றுமை

நீங்கிட முயல்வது கடமை (சமா)"

என அறிவினாலும், அவரவர் திறமையினாலுமே பெருமையும் சிறுமையும் அமையும் என்றும் வேற்றுமை நீக்குதல் யாவர்க்கும் கடமையென்றும் பாடினார் (Shanmuga Sundaram, 2014).

சமுதாயத்தில் புரையோடிப் போயிருக்கும் சாதி மத பேதங்களைத் தேவையற்ற களைகளுக்கு ஒப்பிட்டார் உடுமலையார். பயிர்களின் வளர்ச்சியைத் தடுக்கும் களைகளை நீக்குதல் போல ஒற்றுமையைக் குலைக்கும் சாதி மத பேதங்களை நீக்க வேண்டும் என்றும் அவை இருப்பின் பகைமை மாறாது என்றும் எச்சரிக்கிறார்.

"மழை கொறஞ்சா விளைவுயறாது

நம்ம நாட்டில் ஜாதி மதமிருந்தா

பகைமை மாறாது!

எதையும் சுத்தப் படுத்தணும்

களையிருந்தா பயிர் வளராது

அதையெடுத்துப் பிடணும்

கடனிருந்தா கவலை தீராது

அதையும் கொடுத்துப் பிடணும்!"

களை பயிரை அழித்தல் போல, கடன் நிம்மதியை அழித்தல் போல, சாதிமதம் ஒற்றுமையை அழித்து விடும் என்பதை உணர்த்துகிறார் (Sangai Velavan, 2010).

மனிதன் அறநெறியிலிருந்து தவறும் போது விலங்கு நிலைக்குத் தள்ளப்படுகிறான். விலங்காய் இருக்கும் குதிரைகள் கூட எவ்வித வேறுபாடுமின்றி அனைவரையும் மேலேற்றிச் செல்கின்றன. ஆனால் பகுத்தறிவு கொண்ட மனிதனோ சாதி வேறுபாடு பார்க்கிறான் என்பதை,

"வித்தியாசம் இல்லாமல் நாலுகால் குதிரை

மேலேற்றி வேகமாய்ச் செல்லும் - எவரையும்

மேலேற்றி வேகமாய்ச் செல்லும்

மேலேன்றும் கீழென்றும் ரெண்டுகால் குதிரை

வித்யாசம் காட்டியே தள்ளும் - சாதி

வித்யாசம் காட்டியே தள்ளும்"

என சாதி வேறுபாட்டினால் பிறரைத் தாழ்த்துவோரை இரண்டு கால் குதிரை எனச் சாடுகிறார் (Shanmuga Sundaram, 2014).

சாதி, மதம், இனம், மொழி ஆகிய பேதங்களைக் கடந்து ஒன்றே குலம், ஒருவனே தேவன் எனும் உயர்நிலையை அடைய வேண்டும் என்ற கொள்கை உடையவர் உடுமலையார். நாடு விடுதலையடைந்து இத்தனை ஆண்டுகள் கடந்தும் மக்கள் மனதில் சாதி மத பேதங்கள் இருந்து கொண்டுதானிருக்கின்றன. வெளிப் பேச்சிற்கு மட்டும் பேசிவிட்டு மனதிற்குள் பாகுபாடுகளைக் காட்டிச் செயல்படும் பிற்போக்கு எண்ணம் கொண்ட மனிதர்களைச் சாடி,

"சுதந்திரம் வந்ததுன்னு சொல்லாதீங்க - சொல்லிச்

சும்மா சும்மா வெறும் வாயை மெல்லாதீங்க நீங்க. (சுதந்)

மதம் ஜாதி பேதம்

மனதை விட்டு நீங்கவே - காந்தி

மகான் சொன்ன வார்த்தை போலே

மக்கள் இன்னும் நடக்கலே (சுதந்)"

என்று நாட்டில் இன்னும் சாதி மத பேதங்கள் நீங்காத நிலையைச் சுட்டிக் காட்டுகிறார் (Shanmuga Sundaram, 2014).

சாதி மத பேதங்களைக் கொண்ட ஒரு சமூகம் என்றும் சமத்துவத்தை அடைய இயலாது என்பதை உணர்ந்த உடுமலையார்,

"பெண்ணும் ஆணுமென பிறந்த ஜாதியது

மண்மேல் ரெண்டுதான் வேறில்லை

இதில் பேதம் நாட்டி மனப்பகைமை காட்டி நாம்

பிரிந்து வாழ்வதில் பயனில்லை" (Shanmuga Sundaram, 2014)

என்று சாதி இரண்டொழிய வேறில்லை என்பதை உறுதிபடுத்தியதோடு,

"இழிகுலம் என்றே இனத்தை வெறுத்தது

அந்தக் காலம் - மக்களை

இணைத்து அணைக்க முயற்சி பண்ணுவது

இந்தக்காலம்”

என கால மாற்றத்தையும் கருத்து மாற்றத்தையும் புலப்படுத்தியும் சாதி ஒழிப்பு குறித்துப் பாடியுள்ளார் (Shanmuga Sundaram, 2014).

## மது ஒழிப்பு

சாதி வேறுபாடுகள் குறித்து ஆழ்ந்து சிந்தித்த உடுமலையார் மது ஒழிப்பு குறித்தும் ஆழ்ந்து சிந்தித்துள்ளார். மதுவினால் வரும் கேடுகளை மிக எளிய வரிகளில் எடுத்துரைத்துள்ளார். மதியை மயக்கும் மதுவினால் வரும் சீர்கேடுகளையும் அதை ஒழிக்க வேண்டியதன் அவசியத்தையும் பல பாடல்களில் உணர்த்தியுள்ளார்.

குடியைக் கெடுக்கும் குடிப்பழக்கம் என்பது மிகப்பழங்காலந் தொட்டே இருந்து வந்துள்ளது. இலக்கியங்கள் இது குறித்து எடுத்தியம்புகின்றன. பழங்கால இலக்கியங்களை நோக்குங்கால் தமிழர்கள் மகிழ்ச்சிக்காகவே மதுவை உட்கொண்டனர் என்பது புலனாகிறது. பழந்தமிழரிடம் மது அருந்தும் பழக்கம் இருந்தமையும் அரசன் முதல் குடிமக்கள் வரை ஆண் - பெண் அனைவரும் கள்ளுண்டு களித்தமை இலக்கியங்கள் வழி அறியலாகிறது. அதே இலக்கியங்கள் மது விலக்கினையும் வலியுறுத்துகின்றன. வள்ளுவர் மதுவிலக்கினை வலியுறுத்தி 'கள்ளுண்ணாமை' எனும் தனியொரு அதிகாரத்தையே படைத்துள்ளார்.

“உண்ணற்க கள்ளை உணில்உண்க சான்றோரான்

எண்ணப் படவேண்டா தார், என்ற குறளில்”

அறிவாற்றல் நிறைந்த உயர்ந்த சான்றோரின் நன்மதிப்பைப் பெற விரும்பாதவர் வேண்டுமானால் கள்ளுண்ணலாம் எனக் கூறும் வள்ளுவர், 'உண்ணற்க கள்ளை' என கட்டளையிட்டுக் கூறி மதுவை விலக்குகிறார் (Sangai Velavan, 2008).

கல்வியறிவைப் பெறும் தகுதியுடையவரல்லாதவர்களைப் பட்டியலிடும் நன்னூலார், களிமடி மானிகாமி கள்வன் எனக் கள்ளுண்பவனை முன்வைக்கிறார். களி என்னும் சொல் கள்ளுண்டு களிப்பவனைக் குறிக்கும். இன்னும் பல்வேறு இலக்கியங்களும் கள்ளுண்ணாமையை வலியுறுத்துகின்றன.

நாட்டுக்கும் வீட்டுக்கும் உயிருக்கும் கேடு விளைவிக்கும் மதுவை ஒழிக்க காந்தி முதலான பெருந்தலைவர்கள் பலரும் போராடினர். சாதி ஒழிப்பு எத்தனை அவசியமோ அத்தனை அவசியம் மது ஒழிப்பு என்பதும். தமிழகத்தில் மது ஒழிப்புப் போராட்டத்தில் பெரும்பங்கு வகித்தவர் தந்தை பெரியார். பெரியாரின் கொள்கையில் தோய்ந்த உடுமலை நாராயணகவி தம் பாடல்கள் மூலம் மது ஒழிப்புப் பிரச்சாரத்தை மேற்கொண்டார் என்பது,

“குறத்தி மகன் (1972) படம் முடிய திரையுலகில் தாம் புகுந்தது முதல் இறுதி வரை மதுவிலக்குப் பிரச்சாரத்தை இடைவிடாமல் தொடர்ந்து நடத்தியுள்ளார். போதைப் பொருளிலும், பாதை மாற்றும் பல்வேறு போதைகளிலும் தம் மேதமையை இழந்து விடாமல் நல்ல பாதையில் இளைய யுகம் செல்வதற்கு கவிஞர் காட்டிய பாட்டுப் பாதை, கலைப் பயணம் வழிகாட்டியாக விளங்கும் வாழ்வில் ஒளி துலங்கும்” எனும் சங்கை வேலவனின் கருத்தின் மூலம் அறியலாகிறது (Sangai Velavan, 2008). இது மதுவினால் சீரழியும் சமூகத்தைச் சீர்திருத்துவதில் உடுமலையாருக்கிருந்த அக்கறையைக் காட்டுகிறது.

சென்னை மாகாண காங்கிரஸ் அமைச்சரவை 1946 ஆம் ஆண்டு பிரகடனப்படுத்திய மது விலக்கைப் போற்றுவது போல் 'வித்யாபதி' படத்தில்,

“கள்ளு பீர் சாராயம்

காம வகைகள் - கெட்ட

கஞ்சா அபினி யெல்லாம்

ஓடி ஒழிக்கப்

பிள்ளை குட்டிப் பெண் ஜாதி

வயிறார உண்ணப்

பெற்றதே சுதந்திரம் என்றாடு ராட்டே!" என்று பாடியுள்ளார் (Sangai Velavan, 2008).

மது ஒழிப்பு குறித்த கருத்துகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து தெருக்கூத்து வடிவத்தில் 'நல்லதம்பி' திரைப்படத்திற்காக உடுமலையார் பாடல்களை இயற்றியுள்ளார். கலைவாணர் என். எஸ். கிருஷ்ணனும் டி.ஏ. மதுரமும் குழுவினரோடு நிகழ்த்துவதாக அமைந்திருக்கும் இப்பாடல் மதுவினால் ஏற்படும் சீர்கேடுகளை எடுத்துரைப்பதாக அமைந்துள்ளது.

அக்டோபர் 2ஆம் தேதி 1949 காந்தி ஜெயந்தியன்று அன்றைய தமிழக முதல்வர் ராஜாஜி தமிழ்நாட்டில் மதுவிலக்கை அமல்படுத்தி அதன் மூலம் பல தலைமுறைகளாக மது எனும் அரக்கனின் பிடியிலிருந்து மக்களை விடுதலை பெறச் செய்தார். அதனை நினைவு கூறும் விதமாகவும் உடுமலையார் இப்பாடலை எழுதினார் என்பது'உடுமலை நாராயணகவி' எனும் நூல் வழி அறியக் கிடைக்கிறது.

கோமாளி, கோமாளிச்சியாக என். எஸ். கிருஷ்ணனும் டி.ஏ. மதுரமும் பாடுவதாக உடுமலையார் இயற்றிய இப்பாடலில் மதுப்பழக்கத்திற்கு அடிமையானவனின் குடும்பம் அடையும் துன்ப நிலையையும் வறுமை நிலையையும் நம் மனக்கண்முன் நிறுத்தியுள்ளார்.

"குடிகெடுத்த குடி யொழிஞ்சது

அடிதடி சண்டை யதுங் கொறைஞ்சது

ஆணும் பெண்ணும் புத்தி யறிஞ்சது - எங்க நாட்டிலே,

அக்டோபர் ரெண்டுக்கு மேலே!" (Sangai Velavan, 2008)

என்று மதுவிலக்கு அமலுக்கு வந்த அக்டோபர் மாதத்தைக் குறிப்பாக உணர்த்தி,

"இந்தக் கள்ளுக்குடியை

நம்ம நாட்டை விட்டு

ஒழிச்ச அந்த

நல்ல மனுசன் காலுக்குக்

கோடி கோடி கோடி கோடி

கோடி கோடி கோடி கும்பிடு"

என்று காந்தியடிகளுக்கு நன்றி செலுத்தும் விதமாக இப்பாடலை அமைத்துள்ளார் (Sangai Velavan, 2008).

மதுவிற்கு அடிமையான மனிதனின் இல்லத்தில் தாண்டவமாடும் வறுமை நிலையை உடுமலையார்,

"தாலிக்கயிறு தனியா இருக்கும்

தங்கம் இருக்காது - அதிலே (தங்கம்)

தண்ணி குடிக்கத் தகரக் கொவளை

சொம்பு மிருக்காது - வீட்டிலே!

சொம்பு மிருக்காது - வீட்டிலே!

பாலு வாங்கக் கொழந்தப் பசிக்குப்

பணமிருக்காது - கையிலே - பணமிருக்காது

பாழுங் கள்ளைக் குடிப்பது மட்டும்

நாளுந் தப்பாது! - எந்த (நாளுந்)"

என்ற வரிகளில் காட்சிப்படுத்தியுள்ளார் (Sangai Velavan, 2008). மதுவிற்கு அடிமையான கணவனால் மனைவிக்கு நேரும் இன்னல்களையும் சுட்டிக்காட்டி அதன் மூலம் சமூகத்திற்கு மதுவிலக்கின் அவசியத்தை உணர்த்தியுள்ளார் உடுமலையார்.

## முடிவுரை

இன்றைய சமூகத்தில் அறச்செயல்களும் மனிதநேயச் செயல்களும் குறைந்து கொண்டே வருகின்றன. ஐந்தறிவு உயிர்களிலிருந்து வேறுபட்டு பகுத்தறியும் ஆறாம் அறிவைப் பெற்ற மனிதனின் செயல்கள் இன்றைய சமூகச் சூழலில் விலங்கு நிலைக்குச் செல்லக் கூடியனவாய் உள்ளன. சாதி ஏற்றத்தாழ்வு, மதுப்பழக்கம் போன்ற இன்னபிற காரணங்களால் மாசடைந்துள்ள மனித மனத்தை அறநெறியில் செலுத்திப் பண்படுத்தும் நோக்கில் அக்காலத் திரையிசைப் பாடல்களும் அமைந்தன என்பது சுட்டப்பட்டது. மனித இனத்தை அழிக்கும் ஆற்றல் படைத்த சாதியையும் மதுவையும் ஒழிக்க ஆன்றோரும் சான்றோரும் பாடுபட்ட நிலையில் மக்களை எளிதில் ஈர்க்கக் கூடிய திரைத்துறையைச் சிறந்த ஊடகமாகப் பயன்படுத்தி உடுமலையார் மனிதநல மேம்பாட்டிற்குத் தொண்டாற்றியமை உணர்த்தப்பட்டது. திரையிசையை வெறும் பொழுது போக்கு அம்சமாக எண்ணாமல் சமூகத்தைச் சீர்திருத்தும் ஆற்றல் மிக்க கருவியாய்க் கொண்டு பெரியாரின் கொள்கைகளைப் பரப்பும் விதமாகப் பகுத்தறிவுக் கருத்துகளைக் கொண்டு, சாதி ஒழிப்பு, மதுவிலக்கின் இன்றியமையாமையை உணர்த்தி சமுதாயப் புரட்சியையும், பகுத்தறிவு எழுச்சியையும் மக்களிடையே உருவாக்கப் பாடுபட்டமை உணர்த்தப்பட்டது. நாட்டின் மீதும் மக்கள் மீதும் உடுமலையாருக்கிருந்த அக்கறையும் பாடல்கள் வழி உணர்த்தப்பட்டன. பன்முகத்திறனும் சமூக அக்கறையும் கொண்ட உடுமலை நாராயணகவி தமிழ் ஆய்வுலகம் போற்றத்தக்க ஆன்றோர் என்பதும் அவர் தம் பாடல்கள் ஆய்வுலகிற்குப் பல அரிய கருத்துகளை வழங்கும் என்பதும் இதன் மூலம் புலப்படுத்தப்பட்டது.

## References


Sangai Velavan, (2008) Udumalai Narayana Kaviyin Nattuppura Vilaichal, 1st Edition, Bharathi Puthakalayam, Chennai, India.

Sangai Velavan, (2010) Udumalai Narayana Kaviyin Thiraippadal Ilakkiyam, 2nd Edition, Bharathi Puthakalayam, Chennai, India.

Shanmuga Sundaram, S. (2014) Udumalai Narayana Kaviyin Padalgal, Kaaviya Pathippagam, Chennai, India.

Thatchinamoorthi, A. (2011) Thamilar Nagarigamum, Panpadum, Yaazh Veliyedu, Chennai, India.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License